1971 ஜூன் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது கேள்வி நேரம் முடிகிறது. அவையின் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப் படுகிறது.

Tourism Development Corporation

* 84 *Q.* THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. The Minister for Backward Classes be pleased to state:

(*a*) whether any Tourism Corporation has to be set up in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்:

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதற்கென இணைச் செயலாளர் தரத்தில் தனி அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இக்கழக அமைப்புபற்றிய விபரங்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன. விரைவில் இக்கழகம் பதிவு செய்யப்படும்.

THIRU K. M. SUBRAMANIAM: Will the Hon. Minister clarify whether the middle and low-income group tourism will be encouraged in this State and if so what arrangements he is proposing to make for this type of tourism apart from foreign tourism? That is point No. 1. Is the Hon. Minister also aware that several crores of rupees are being spent by luxury hotels, under the excuse of tourism, with the result many of the priority claims of people, poor people, in respect of housing, are lost?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பற்றியது. இதில் கனம் அங்கத்தினர் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு சுற்றுலாவிற்கு என்னென்ன ஏற்பாடுகள் என்று கேட்கிறார்கள். அதையெல்லாம் கவனிக்கத்தான் இந்த சுற்றுலாக் கழகம் அமைக்கப்படுகிறது. எல்லா இடங்களிலும் குறைந்த செலவில் தங்குவதற்கான விடுதிகளை அமைக்கவும், சுற்றுலா பயணிகள் நல்ல வகையில் தங்குவதற்கான அளவில் விடுதிகளை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, உல்லாசப் பயணிகளை ஈர்க்க உதகையில் 'ரோப் வே' ஒன்றை அமைக்கத் திட்டமுண்டா? ஆம் எனில், அதற்கான வேலைகள் எப்பொழுது துவங்கும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: திட்டம் இருக்கிறது. வேலைகள் துவங்குவதற்கான நடவடிக்கைகள் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

[1971 ஜூன் 29

திரு. மு. சுருளிவேல் : தலைவர் அவர்களே, இந்தச் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் சட்டமன்ற உறுப்பினர்களும் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளப் படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சுற்றுலா வளர்ச்சிக் கழகம் என்பது ஒரு கம்பெனியைப் போல உருவாக்கப்படும். அதற்கான சட்டதிட்டங்களை உருவாக்கி வருகிறோம். அவை உருவாக்கப் பட்ட பிறகு, சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம் பெறுவார்களா என்பது சட்ட சபைக்கு அறிவிக்கப்படும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : When they set up this Tourism Corporation, will they have a non-official Chairman and when they appoint members to this corporation, will they do it without any political bias?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : திட்டம் இப்பொழுது கருவில் இருக்கிறது, பிறந்த பின் சொல்லுகிறேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : சார், இந்தச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்ட்ரல் டூரிஸம் டிபார்ட்மென்டின் கீழ் ஒன்று இருக்கிறது; நம் ஸ்டேட் கழகம் ஒன்று வருகிறது. இரண்டுக்கும் மூரண்பாடு ஏற்படாதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இந்த சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அமைக்கப்படுவதன் நோக்கமே, தமிழகத்தில் சுற்றுலாத் துறையை வளர்ச்சி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில்தான். அதன் மூலம் அந்நியச் செலாவணியைப் பெற வேண்டும் என்பதுதான் நோக்கம். மத்திய சர்க்காரில் உள்ள கழகத்திற்கு இது ஆதரவாக இருக்குமே யல்லாமல் அதற்கு எதிராகவோ, போட்டியாகவோ இருக்காது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் இருந்த அரசாங்கம் இப்படிப்பட்ட கார்ப்பொரேஷன்கள் அமைக்கும் போது, நான்-அபிஷியல் சேர்மனையே போட்டார்கள். அதே முறையே இந்த அரசும் பின்பற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இதற்கு நான் முன்பே பதில் அளித்திருக்கிறேன்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு சட்ட திட்டங்கள் ஏற்படுத்தப் போவதாகச் சொன்னார்கள். அப்படி ஏற்படுத்தும்போது, இப்பொழுது ஜப்பான் நாட்டில் இருக்கும், ஜே. டி. எஸ். என்கிற ஜப்பான் ட்ராவல் சர்வீஸ் என்ற ஸ்தாபனம், உலகத்தில் உள்ள உல்லாச நிறுவனங்களில் மிக பிரசித்தமானதாக இருப்பதால், அதன் முறைகளையும் ஆராய்ந்து, அதிக அளவில் அந்நியச் செலாவணி பெறுவதற்கு நம் அரசு முயற்சிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

1971 ஜூன் 29]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, பல நாடுகளுடைய சுற்றுலா வளர்ச்சிக் கழகங்களை இந்த அரசு ஆராய்ச்சி செய்துதான் நமக்கு ஒரு சுற்றுலாக் கழகத்தை அமைக்க முடிவு எடுத்துள்ளது. தமிழகத்தில் சுற்றுலா வரும் பயணிகளை மூன்று பிரிவாகக் கொள்ளலாம். வெளிநாட்டிலிருந்து வரும் பயணிகள் ; வட நாட்டிலிருந்து வரும் யாத்திரிகர்கள் ; மூன்றாவதாக உள்நாட்டிலேயே க்ஷேத்திரங்களைப் பார்க்க வரும் பிரயாணிகள். இந்த மூன்று பிரிவு பிரயாணிகளையும் பாதுகாப்பாக வைக்க, அவர்களுடைய தேவைகளைத் தந்து, கணிசமான அளவில் கட்டணங்களைப் பெற வளர்ச்சிக் கழகம் முயற்சி செய்யும். அந்த எண்ணத்தின் அடிப்படையில் தான் இது ஏற்படுத்தப் படுகிறது. இருக்கும் சுற்றுலா விடுதிகளையும் இந்தக் கழகம் மேற்கொள்ளும். அதே போல், ரூ. 50 லட்சம் அளவில் மூலதனம் போட்டு, இதை உருவாக்கத் தீர்மானித்திருக்கிறது. இது வளர்ச்சி அடைந்த பிறகு, இதன் மூலம் உணவு விடுதிகள், சாதாரண பாமர மக்களும் தங்குவதற்கான வகையிலும், வெளி நாட்டவரைக் கவரும் முறையிலும் ஏற்பாடுகளைச் செய்யும்.

திரு. என். இராசாங்கம் : தலைவர் அவர்களே. இந்த சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்கனவே இருந்த இடங்களை வளர்ச்சி செய்வதில் மட்டும் ஈடுபடுமா அல்லது புதிதாக இடங்களை அமைக்கவும் பரிசீலிக்குமா? அப்படிச் செய்யும் போது அன்று காலத்திலேயே குறிப்பிடப்பட்ட, சிதம்பரம் பக்கத்தில் உள்ள பிச்சவரம் என்ற இடத்தில் சுற்றுலா மாளிகை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் இந்தக் கழகம் கவனிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் சுற்றுலாத் துறையில் ஏராளமான வேலைகள் இருக்கின்றன. நிதிப் பற்றாக்குறை இருப்பது கனம் அங்கத்தினருக்கும் தெரியும். அதே நேரத்தில் மத்திய சர்க்காரிலிருந்து பெறவேண்டிய தொகைகளையும் பெற முடியவில்லை. இல்லையென்றால், பிச்சவரத்தில் மட்டுமல்லாமல், இன்னும் கோடிக்கரை போன்ற அழகான பகுதிகள் பல இருக்கின்றன, அவற்றையும், நல்ல அளவில் வளர்த்து விளம்பரம் செய்ய முயற்சிகள் எடுக்கலாம். ஏற்கனவே இருக்கின்ற பகுதிகளை வளர்க்கவும். புதுப்பகுதிகளை விளம்பரம் செய்யவும் இந்தக் கழகம் பாடுபடும்.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, உதகைக்கு சீசன் காலத்தில் வரும் பயணிகள் தங்க இடம் போதாமல் இருப்பதால், உதகையில் அதிகமான பயணிகள் தங்கக்கூடிய அளவில், தக்க வாய்ப்பினை ஏற்படுத்த அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே. அடுத்த கேள்வி இதே தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம். கேள்வி எண் 85.